## மருந்து பற்றிய தகவல்

# 3 டிசி (லாமிவுடைன், எபிவிர்)

## 3 டிசி மருந்து எனக்கு ஏன் கொடுக்கப்படுகிறது?

- 3 டிசி (லாமிவுடைன் அல்லது எபிவிர் என்றும் அழைக்கப்படுகிறது) எனும் மருந்து மற்ற மருந்துகளுடன் இணைந்து ஹெச்ஐவி (ஹ்யூமன் இம்யுனோ டிபிஷியன்சி வைரஸ்) நோயின் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது.
- ஹெச்ஐவிக்கான மருந்துகள் காம்பிவீர் மற்றும் ட்ரைவிசிர்-ன் ஒரு பகுதி 3 டிசி ஆகும்.
- "ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ்" எனும் புரோடீனை 3 டிசி தடுக்கிறது. இதனால், இது ரிவர்ஸ் ட்ரான்ஸ்கிரிப்டெஸ் இன்ஹிபிட்டர்ஸ் (ஆர்டிஐக்கள்) எனும் மருந்துகள் பிரிவை சேர்ந்தது. ஹெச்ஐவி கிருமி பெருக, அதற்கு இந்த புரோட்டீன் தேவைப்படுகிறது. அதனால் இந்த மருந்து அதை தடுப்பதன் மூலம் ஹெச்ஐவி நோயை தாமதப்படுத்த உதவுகிறது.
- இந்த மருந்தை உட்கொள்ளுவதால், உங்கள் உடலில் உள்ள கிருமியின் அளவை குறைக்கலாம். நீங்கள் எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட நோய்களினால் நோய்வாய்ப்படுவதற்கான வாய்ப்புகள் குறையலாம், உடல் அதிக நாள் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது அல்லது உடல் ஆரோக்கியத்தை மீண்டும் பெறலாம். உங்கள் நோய் எதிர்ப்பு சக்திக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்?

- 3 டிசி 150 மி.கி. மாத்திரையாகவும், திரவ வடிவத்திலும் (10 மி.கி./சிசி) கிடைக்கிறது.
- 3 டிசி பொதுவாக 150 மி.கி. ஒரு நாளைக்கு இருமுறை எடுத்துக்கொள்ளப்படுகிறது. உங்களுக்கு சிறுநீரக பிரச்சினை இருந்தால் இந்த அளவு மாற்றப்படும்.
- 3 டிசி உணவுடனோ அல்லது தனியாகவோ எடுத்துக் கொள்ளலாம்.
- 3 டிசி-ன் திரவ வடிவத்தில் சர்க்கரை உள்ளது, அதனால் பற்சிதைவை தடுக்க இதை எடுத்துக் கொண்டவுடன் பற்களை நன்றாக சுத்தம் செய்யவும். உங்களுக்கு சர்க்கரை வியாதி இருந்தால், 3டிசி திரவம் எடுத்துக் கொள்வது இரத்தத்தில் சர்க்கரையின் அளவை பாதிக்கும்.
- 3 டிசி, உலர்ந்த இடத்தில், அறையின் சீதோஷண நிலையில் வைக்க வேண்டும். 3 டிசி-ன் திரவ வடிவத்தை 25 செல்ஸியஸுக்கு கீழ் வைக்க வேண்டும். இந்த மருந்தை சமையல் அறையிலோ, பாத்ரூமிலோ வைக்க வேண்டாம். ஏனென்றால் இங்குள்ள ஈரப்பசையினால் மருந்தின் பயன் குறைந்துவிடும்.
- குழந்தைகளிடமிருந்து நீக்கி வைக்கவும்.

## ஒரு நேர மருந்தை நான் எடுத்துக் கொள்ள மறந்தால் என்ன செய்ய வேண்டும்?

- தவறவிட்ட மருந்தை முடிந்தவரை உடனே எடுத்துக் கொள்ளவும். ஆனால் உங்கள் அடுத்த வேளை மருந்திற்கும், தவற விட்ட மருந்திற்கும் இடையே 2மணி நேரத்திற்கும் குறைவாக இருந்தால் வழக்கமான முறையில் மருந்தை எடுத்துக் கொள்ளவும், இதை இரட்டிப்பாக்க வேண்டாம்.
- ஹெச்ஐவி மருந்துகள் வேலை செய்ய, எல்லா மருந்துகளையும் முறையாகவும், தொடர்ந்தும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மருந்துகளை சரியாக எடுத்துக் கொள்ள தவறினால் அல்லது மறந்தால், அதன் பயன் இழக்கலாம், மேலும் இந்த கிருமியில் தாமாகவே மாற்றம் ஏற்பட்டு, மருந்திற்கு எதிராக மாறி பயன் அளிக்காமல் போகலாம்.

## 3டிசியின் பக்க விளைவுகள் என்னென்ன?

- 3டிசியின் பக்க விளைவுகள் மிகவும் குறைவு மற்றும் அரிது. பக்கவிளைவுகளில்:
  - தலைவலி
  - வயிறு அசுகம்
  - வயிற்றுப் போக்கு
  - காய்ச்சல்
  - தோல் சொறி
  - சோர்வு
  - தலைமுடி கொட்டுதல்
  - கை கால்களில் குறுகுறுப்பு அல்லது உணர்ச்சியற்ற தன்மை

- மருந்தினால் பக்க விளைவுகள் ஏற்பட்டால், டாக்டர் அல்லது மருந்து கடைக்காரரிடம் அறிகுறிகள் பற்றி விவாதிக்கவும்.
- மருந்து கடைக்காரர் அல்லது டாக்டரிடம் பேசுமுன் மருந்தை நிறுத்தவோ, அளவை மாற்றவோ வேண்டாம். மருந்தை நிறுத்தாமலேயே பக்க விளைவுகளை எவ்வாறு சமாளிப்பது என்று அவர்கள் யோசனைகள் தெரிவிக்கலாம்.
- மிகவும் அரிதாக, சில நேரங்களில் 3டிசியினால் ரத்தத்தின் வெள்ளை அணுக்கள் குறையலாம் (இதனால் பாக்டீரியா கிருமி தாக்கும் அபாயம் அதிகமாகிறது), ப்ளேட்லெட்ஸ் குறையலாம் (இதனால் ரத்தக் கசிவு அபாயம் அதிகரிக்கிறது) அல்லது சிவப்பு அணுக்கள் குறையலாம் (இதனால் சோர்வு மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படலாம்).
- குழந்தைகளில் 3டிசி அபூர்வமாக பான்கிரியாடிடிஸ்-ஐ ஏற்படுத்தலாம். இதன் அறிகுறிகள் திடீரென கடுமையான வயிற்றுவலி, குமட்டல் மற்றும் வாந்தி. இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக டாக்டரை அணுகவும்.

## மற்ற மருந்துகளுடன் 3டிசி-ஐ எடுத்துக் கொள்ளலாமா?

- 3டிசி மற்ற மருந்துகளுடன் இணைந்து செயல்படலாம். நீங்கள் எடுத்துக்கொள்ளும் டாக்டர் கொடுத்த மருந்துகள் மற்றும் வேறு (மூலிகைகள் மற்றும் வைட்டமின்கள் உட்பட) மருந்துகள் பற்றி டாக்டர் மற்றும் மருந்து கடைக்காரரிடம் கூறவும்.

# 3 டிசி (லாமிவுடைன், எபிவிர்)



## 3டிசியை மது மற்றும் தெருவோர போதை மருந்துகள் உடன் எடுத்துக்கொள்ளலாமா?

- பொதுவாக, ஹெச்ஐவி மருந்துகள் எடுத்துக்கொள்ளும்போது அதிக அளவு மது மற்றும் தெருவோர போதை மருந்துகளை தவிர்ப்பது நல்லது. .
- நீங்கள் எடுத்துக்கொள்ளும் சில மருந்துகளுடன் மது விளைவுகளை எற்படுத்தலாம். குடிக்க வேண்டும் என்பதால் ஒரு நேர மருந்தை தவிர்க்க வேண்டாம்.

## நான் கர்ப்பமாக இருந்தாலோ, தாப்பால் ஊட்டி வந்தாலோ 3டிசியை எடுத்துக்கொள்ளலாமா?

- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், 3டிசி எடுத்துக் கொள்வது பற்றி டாக்டரிடம் கலந்து பேசவும்.
- தாய்பால் மூலமாக ஹெச்ஐவி கிருமி பரவும் என்பதால், ஹெச்ஐவி உள்ள பெண்கள் தாய்பால் கொடுப்பதை தவிர்க்கலாம் என்று பரிந்துறைக்கப்படுகிறது.

## 3டிசி எடுத்துகொள்ளும் போது வேறு என்னென்ன முன் எச்சரிக்கைகள் பற்றி நான் தெரிந்து கொள்ள வெண்டும்?

- 3டிசி உங்கள் சிறுநீரகத்தை பாதிக்கலாம். இது அரிதாக இருந்தாலும் உங்கள் கல்லீரல் மற்றும் சிறுநீரக செயல்பாடு குறித்த சோதனைகளை டாக்டரிடம் சென்று முறையாக பரிசோதித்துக்கொள்ளவும்.
- தொடர்ச்சியாக மருந்துகள் இருக்கிறதா என உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.
- உங்களுக்கு சிறுநீரக பிரச்சினை இருந்தால், 3டிசி தொடங்குமுன் டாக்டரிடம் இதை தெரியப்படுத்திவிடுங்கள்.
- 3டிசி கிருமிகளை அழிப்பதில்லை, எய்ட்ஸ்-ஐ குணப்படுத்துவதில்லை. ஹெச்ஐவி பறவுவதை தடுப்பதும் இல்லை, அதனால் முன்எச்சரிக்கை எற்பாடுகளை செய்து கொள்ளவும், உடலுறவு கொள்ளும் போது (லேடெக்ஸ் காண்டோம்களை பயன்படுத்தவும்) அல்லது போதை மருந்து பயன்படுத்தும்போது (சுத்தமான ஊசிகளை பயன்படுத்தவும்).

ஹெச்ஐவி சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிகிச்சைகள் பற்றி முழு தகவல் தெரிந்த பயிற்சி பெற்ற மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட மருத்துவ சிகிச்சைகள் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

தங்களை கவனித்து கொள்பவர்களுடன் சேர்ந்து, உடல் நிலையை தாமே பராமரிக்க விரும்பும் ஹெச்ஐவி/எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு தகவல் மற்றும் உதவியை கனடாவின் எய்ட்ஸ் சிகிச்சை தகவல் பரிமாற்றம் (CATIE) மற்றும் தெற்காசிய எய்ட்ஸ் தடுப்பு நிலையம் (ASAAP) நல்லெண்ணத்துடன் வழங்குகிறது. CATIE(கேட்டி) அல்லது ASAAP (ஏஸாப்) அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்களை பெறுபவர்கள் இதை மருத்துவ ஆலோசனையாக கருதக்கூடாது. குறிப்பிட்ட சிகிச்சைகளை நாங்கள் பின்பற்றவோ, பரிந்துரைப்பதோ இல்லை, பல்வேறு விரிவான தகவல்களை கலந்தாலோசிக்கவே நாங்கள் வலியிறுத்துகிறோம். மருத்துவம் சம்பந்த்ப்பட்ட எந்த ஒரு முடிவையோ, நடவடிக்கையையோ எடுக்குமுன் பயிற்சி பெற்ற மருத்துவரை கலந்து ஆலோசிக்குமாறு வலுவாக வலியிறுத்துகிறோம்.

CATIE அல்லது ASAAP அளிக்கும் அல்லது பிரசுரிக்கும் தகவல்கள் முழுமையானவை அல்லது முற்றிலும் சரியானவை என்பதற்கு நாங்கள் எந்த உத்தரவாதமும் அளிப்பதில்லை. இந்த தகவல்களின் அடிப்படையில் செயல்படுபவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் செயல்படலாம். இத்தகைய தகவல்களிலிருந்து பெறும் பயன் அல்லது அவபயன்களால் ஏற்படக்கூடிய எந்த ஒரு சேதத்திற்கும் CATIE அல்லது ASAAP அல்லது கனடாவின் பொது சுகாதார ஏஜென்சியோ, அதன் ஊழியர்களோ, இயக்குநர்களோ, அதிகாரிகளோ, அல்லது தொண்டர்களோ, பொறுப்பாக மாட்டார்கள். CATIE அல்லது ASAAP மூலமாக கிடைக்கும் அல்லது பிரசுரிக்கப்படும் கட்டுரையின் கருத்துக்கள் முற்றிலும். ஏழுத்தாளரின் கருத்துக்கள் ஆகும், இது CATIE அல்லது ASAAP யின் கொள்ளகைகளையோ கருத்துக்ளையோ பிரதிபலிப்பதில்லை. கனடாவின் எந்த ஒரு பொது சுகாதார ஏஜென்சியின் கருத்துக்களையும் இது பிரதிபலிப்பதில்லை.

Copyright: This Fact Sheet is made available through a collaboration between Alliance for South Asian AIDS Prevention (ASAAP), Asian Community AIDS Services (ACAS) and the Canadian AIDS Treatment Information Exchange (CATIE). Original content developed by ACAS, 2001. Translation into Punjabi and Tamil by ASAAP, 2006.

This information is also available in Chinese, Tagalog and Vietnamese www.acas.org
Funding has been provided by the Public Health Agency of Canada
Supported by an unrestricted educational grant from GlaxoSmithKline in partnership with Shire BioChem